1989 மே 2]

(முற்பகல் 10-30)

(ஆ) திசையன்விளை நகர எல்லைக்குள் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுதல்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் திசையன்விளையில் 40 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட வீடுகள் மற்றும் கடைகளை நெடுஞ்சாலைத் துறையினர் இடித்தது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம், தொகுதியில், திசையன்விளை நகர எல்லைக்குள் செல்லும் நெடுஞ்சாலைகளான நாங்குநேரி—இடையன்குடி மற்றும் திசையன்விளை—உடன்குடி சாலைகளில் இரு புறமும் ஆக்கிரமிப்புகள் அதிகரித்து, போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் மற்றும் பொதுச் சுகாதாரத்திற்கும் பெரிதும் கேடு விளைவிப்பதாகவும், வாகனங்கள் செல்ல வழியில்லாமல் நீண்ட நேரம் தாமதப்படுவதாகவும், அடிக்கடி விபத்துக்கள் நடப்பதாகவும் பொது மக்களிடமிருந்தும், அரசியல் கட்சிகளிடமிருந்தும் நீண்ட நாட்களாக பரவலாக புகார்கள் வந்து கொண்டிருப்பதாலும், மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நடத்தும் மனு நீதி நாட்கள் கூட்டத்திலும் புகார் செய்யப்பட்டதாலும், மேலும் கூறப்பட்ட ஆக்கிரமிப்புகள் அனைத்தும் 15–3–89 மற்றும் 16–3–89 அன்று அகற்றப்பட்டன. அகற்றப்பட்ட ஆக்கிரமிப்புகள் அனைத்தும் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி பாரபட்சமின்றியே எடுக்கப்பட்டன. மேலும், ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்போது முறையாக முன்பே நோட்டீஸ்கள் சார்பு செய்தும், டாம் டாம் விளம்பரம் செய்துமே அகற்றப்பட்டன. மேலும், ஆக்கிரமிப்புகள் அகற்றும்போது, சேரன்மாதேவி துணை ஆட்சித் தலைவர், வருவாய்த்துறை அதிகாரிகள் மற்றும் காவல் துறையினரும் உடன் இருந்து நில எல்லைகளை அளவு சரி பார்த்த பின்புதான் அகற்றப்பட்டுள்ளன. எனவே, இதில் எந்த முறைகேடும் நடைபெறவில்லை. இதில் இத்துறை அதிகாரிகள் எந்த தனிப்பட்டவரின் தூண்டுதல் பேரிலும் செயலாற்றவில்லை. பொது மக்களின் நன்மையை கருதியே ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள தகவல்கள் திருப்தித் தருவதாக இல்லை. ஏன் என்று சொன்னால், 4 சாலைகளிலும் ஆக்கிரமிப்பு என்று சொல்லி, அதை அகற்றுவதாகக் கூறினார்கள். உடன்குடி சாலை, இடையன் குடி சாலை, திருநெல்வேலி செல்லுகின்ற சாலை, இந்த மூன்று சாலைகளிலும் அகற்றியிருக்கிறார்கள். நான்காவது சாலையான இட்டமொழி சாலையில் அகற்றவேயில்லை. அதற்கு ஏதோ உள்நோக்கம் இருக்கிறது என்று நான் சந்தேகப்படுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக சாலைக்குத் தேவையான இடங்கள் போக, தேவையில்லாத இடங்களை அகற்றியிருக்கிறார்கள். இதற்கு முன்னதாக ஒரு முறை ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என்று முனைந்த வேளையிலே மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சுமார் 20 குடும்பத்தினர் சென்று முறையிட்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த இடத்தை வந்து பார்த்து, இந்த இடங்களில் வாழ்கின்ற அந்த 20 குடும்பத்தினரும் சுமார் 40 ஆண்டுக்காலமாக வாழ்ந்து வருகின்ற காரணத்தாலேயும், இந்த இடம் சாலைக்கு எந்த வகையிலும் தேவையில்லாத அளவில் தள்ளி இருக்கின்ற காரணத்தாலும் , அவர்கள் இதிலே இருந்து கொள்ளலாம் இதை அகற்ற வேண்டிய தேவையில்லை, இந்த ஆக்கிரமிப்பை ரத்து செய்யலாம் என்று கூறியபோதிலும், அப்படிப்பட்ட உத்தரவு இருக்கிற போதிலும், அதிலே கை வைத்திருக்கிறார்கள். பிறகு 16 அடி சாலை என்று சொன்னால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதன் மீது உரையாற்றிக் கொண்டு இருக்கிறீர்கள். வினா வடிவில் சிறு விளக்கம் தான் கேட்க வேண்டும்.

திருமதி ரமணி நல்லதம்பி : முடித்து விடுகிறேன். 3 கேள்வி தான். ஏன் இட்டமொழி சாலையில் ஆக்கிரமிப்பை அகற்றவில்லை? தேவையில்லை என்று சொன்ன, ஒரு கலெக்டருடைய உத்தரவை மீறி, ஏன் அந்த இடத்தில் அகற்றியிருக்கிறீர்கள். பிறகு சாலைக்குத் தேவையில்லாத இடங்களில் பட்டா கொடுக்கப்பட்டு உள்ளது. டவுன் பிளானிங் அப்ரூவலாகி உள்ளது. அதிலே 4, 5 லட்சம் பெறுமானமுள்ள கட்டிடங்களைக் கட்டியிருக்கிறார்கள். அதை ஏன் இடித்திருக்கிறீர்கள்? பிறகு சாலைக்கு எந்த வகையிலும் தேவையில்லாத தனி நபர்களுடைய உடமைகள் எல்லாம் பாதிக்கப்பட்டு, ஏறத்தாழ 1 கோடி ரூபாய்க்குச் சேதம் விளைந்திருக்கிறதே, அதற்கு பட்டாவும் கொடுக்கப்பட்டு இருக்கிறது, டவுன் பிளானிங் அப்ரூவல் இருக்கிறது. இப்படி தேவையில்லாத, ஆக்கிரமிப்புகளை அகற்றுகிறோம் என்ற போர்வையிலே ஏற்பட்ட இழப்புக்கு, அவர்களுக்கு ஈடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இந்த ஆக்கிரமிப்புகளைப் பொறுத்தவரையில், மாவட்ட வளர்ச்சி மன்றம் கூட்டத்திலேயே ஒருமனதாக முடிவு செய்யப்

1989 மே 2] [திரு. மு. கண்ணப்பன்]

பட்டு, அந்த முடிவினுடைய அடிப்படையிலே நீண்டகாலமாகவே மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அரசியல் கட்சிகள், இன்னும் பல்வேறு பொதுமக்களுடைய நலம் காக்கின்ற நிறுவனங்கள் மூலம் வந்த புகாரினுடைய அடிப்படையிலேதான் அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு எல்லாம் முறையாக நோட்டீஸ்கள் கொடுக்கப்பட்டு, டாம் டாம் மூலமாக முன்னாலே அறிவிக்கப்பட்டு, அந்த ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. அதோடு, சேரன்மாதேவியினுடைய துணை ஆட்சித் தலைவரும், வருவாய்த் துறை அதிகாரிகளும், காவல் துறையினரும் உடன் இருந்து, அங்கேயிருக்கக் கூடிய நிலங்களை, எந்தெந்த அளவு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு உள்ளது என்பதை சர்வே செய்ததற்குப் பின்னாலேதான் ஆக்கிரமிப்பு செய்து இருக்கின்ற பகுதிகளை மட்டுமே அகற்றியிருக்கிறார்களே தவிர, பட்டா நிலங்களிலே போய் அத்தகைய கெடுபிடிகள் ஏதும் செய்யவில்லை.

அதோடு இதிலே நாங்குநேரி, இடையன்குடி, திசையன்விளை, உடன்குடி ஆகிய எல்லா சாலைகளிலும் இருக்கிற ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தியிருப்பதாகத்தான் தகவல் தந்திருக்கிறார்கள். அப்படி ஏதாவது ஒரு பாதையில், குறிப்பிட்டுள்ளபடி ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை என்று சொன்னால், நிச்சயமாக அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கும்.

6. சட்டமுன்வடிவு.

ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகின்றேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.